DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சுசீலாதேவி | Father Name : சுப்பையா |
| Age : 41 | Village : ஹவுசிங் போர்டு, சாத்தூர் |
| Taluk : | Calling : அக்பஞ்சர் கிளினிக் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 23, 2026 4:39 PM

(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் அக்பஞ்சர் கிளினிக் வைத்து தொழில் செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் எனது வீட்டில் வைத்து குடும்ப பிரச்சனை காரணமாக எனக்கும் எனது கணவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. தற்போது நாங்கள் பெரியோர்கள் முன்னிலையில் பேசி தீர்த்துக்கொண்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியது. (புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

3. நான் தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரி என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

4. கடந்த 01.02.2022ம் தேதி காலை 11.00 மணிக்கு படந்தால் சந்திப்பில் உள்ள அய்யாவு டீக்கடை அருகில் வைத்து ஆஜர் எதிரி என்னையும் எனது மகள் ஜெயமீனாட்சியையும் வழிமறித்து அரிவாளை காட்டி தாக்க முயற்சி செய்து கொலை மிரட்டல் விடுத்தாரா என்றால் இல்லை. தற்போது எதிரி என்னுடைய கணவர் என்ற காரணத்தினால் அவருடன் சமாதானமாகிவிட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u> இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ஜெயமீனா | Father Name : வீரராஜ் |
| Age : 23 | Village : ஹவுசிங் போர்டு, சாத்தூர் |
| Taluk : | Calling : MBA படித்துக்கொண்டிருக்கிறேன். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 23, 2026

(Accused Present)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் M.BA படித்துக்கொண்டிருக்கிறேன்.

2. அ.சா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரி எனது அப்பா ஆவார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் படந்தால் சந்திப்பில் உள்ள அய்யாவு டீக்கடை அருகில் வைத்து அடையாளம் தெரியாத நபர்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஏற்பட்ட பிரச்சனையில் தள்ளு முள்ளு ஏற்பட்டது. எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

3. நான் தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரி என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u> –

4. கடந்த 01.02.2022ம் தேதி காலை 11.00 மணிக்கு படந்தால் சந்திப்பில் உள்ள அய்யாவு டீக்கடை அருகில் வைத்து ஆஜர் எதிரி என்னையும் எனது அம்மாவையும் வழிமறித்து அரிவாளை காட்டி தாக்க முயற்சி செய்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் இல்லை. எதிரி என்னுடைய அப்பா என்ற காரணத்தினால் அவருடன் சமாதானமாகிவிட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**</u> இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur